பக்கங்கள்:-23

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | வைகாசி 03 | சனிக்கிழமை | 17.05.2025 | அதிர்வு 286

## கொழும்பில் துப்பாக்கிச்சூடு! இருவர் வைத்தியசாலையில்!!



கொழும்பு, கொட்டாஞ்சேனைப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை 07

### ஜே.வி.பிக்கு இடமளிக்காது

# வடக்கு, கிழக்கு சபைகளில் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சியமைக்கத் தீர்மானம்!



(எஸ்.நிதர்ஷன்)

தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்தை குறிப்பாக ஆளும் தேசிய மக்கள் சக்தி கைப்பற்றுவதற்கு இடமளிக்காமல், தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சியமைக்கத் தீர்மானித்துள்ளன.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி வடக்கு, கிழக்கில் 35 சபைகளில் முதல் நிலை பெற்றுள்ள நிலையில், அந்தச் சபைகளில் 06

# வடக்கு முதல்வர் வேட்பாளராக களமிறங்குகின்றார் சுமந்திரன்

### 'சங்கு' கூட்டணியிடம் அவரே தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராகத் தான் களமிறங்கவுள்ளார் என்று அக் கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் அறிவித்துள்ளார். 06



# நாகபட்டினத்தில் இருந்து காங்கேசன்துறை வந்த கப்பலில் சூட்சுமமாகப் போதைப்பொருள் கடத்தி வந்த பயணி கைது!

(ந.லோகதயாளன்)

நாகபட்டினத்தில் இருந்து காங்கேசன்துறை வந்த பயணிகள் கப்பலில் போதைப்பொருள் கடத்திவந்த ஒருவர் சுங்கப் பரிசோதனையின்போது அகப்பட்டார்.

நாகபட்டினத்தில் இருந்து வருகை தந்த சென்னையைச் சேர்ந்த பயணி ஒருவர் 4 கிலோகிராம் குஷ் ரக போதைப் பொருளை சூட்சுமமாக உடமையில் மறைத்து எடுத்து வந்துள்ளார்.

சோதனையில் சுங்க அதிகாரிகள் அதனைக் கண்டுபிடித்துக் கைப்பற்றினர்.

போதைப்பொருளைக் கடத்தி வந்தவரைக் கைது செய்த சுங்கத் திணைக்களத்தினர், மேலதிக சட்ட நடவடிக்கைக்காக அவரைக் காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.






வடக்கு, கிழக்கில் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் சபை நிர்வாகங்களை அமைப்பது தொடர்பில் நேற்று தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன எனத் தெரிகின்றது.

நேற்றுக் காலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிநிதிகள் குழு ஒன்று புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தனின் இல்லத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் (சங்குக் கூட்டணியின்) உயர்மட்டக் குழுவோடு பேச்சு நடத்தியது.

இந்தப் பேச்சுக்களில் சித்தார்த்தனோடு ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஜனநாயக போராளிகள் கட்சித் தலைவர் வேந்தன் ஆகியோர் ஒரு தரப்பிலும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் (சைக்கிள் கட்சியின்) செயலாளர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் சட்டத்தரணி காண்டீபன் உட்பட மூவரும் மறு தரப்பாகவும் பங்கு பற்றினர். 06




# கொழும்பில் உழுந்து வடை தானசாலை!

வெசாக் அனுஷ்டிப்பை முன்னிட்டு கொழும்பு, கொம்பனித்தெரு, யூனியன் பிளேஸ் இல153 இல் அமைந்துள்ள "இந்து ஸ்வயம்சேவக சங்கம்" நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் உழுந்து வடை "தன்சல்" (தானசாலை) சேவையை வழங்கியது.

ஆர். விஜயபாலன் தலைமையில் நடைபெற்றது இந்த தானசாலை சேவையில் கலந்து கொண்டு உழுந்து வடை பிரசாதத்தை உண்டு மகிழ்ந்தனர் மக்கள். இலங்கையில் முதல் முறையாக நடைபெறும் உழுந்து வடை தானசாலை இதுவாகும்.













# பெரும்பான்மை பெற்ற தரப்பினர்தான் சபைகளில் ஆட்சி அமைக்க வேண்டும்!

## இப்படி நாமல் எம்.பி. வலியுறுத்து

“உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது குறித்து நீண்ட பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றோம். சபை- களை அமைப்பதற்கான வழிமுறைக்கமைய ஒவ்வொரு சபைகளிலும் பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்டுள்ள தரப்பினரை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி அமைக்கப்பட வேண்டும். எதிர்க்கட்சிகள் பெரும்பான்மையைக் கொண்டுள்ள சபைகளில் அவற்றின் உறுப்பினர்களைப் பதவிகளுக்கு நியமிக்க ஆதரவளிக்கப்படும்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“பயத்தால் நாம் அரசியல் தீர்மானங்களை எடுப்பதில்லை. அதனை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் அறிவார். 2005இல் அவர் எனது தந்தையுடன் பணியாற்றியிருக்கின்றார்.

மஹிந்த ராஜபக்ஷவைப் பற்றி அவர் அறிவார். நான் அவருடைய புதல்வன். எனவே, ஜனாதிபதியோ அல்லது ஜே.வி.பி.யோ எம்மை அச்சுறுத்தி அரசியல் தீர்மானமொன்றை எடுக்க வைக்க முடியும் என்று நினைத்தால் அதற்கு நாம் தயாராக இல்லை.

நாம் மக்கள் ஆணைக்கு மதிப்பளிக்கின்றோம். அதனை விடுத்து பொய் சாட்சிகளை உருவாக்கி எம்மைப் பழி வாங்க எண்ணினால் அதனை எதிர்கொள்ளவும் நாம் தயாராக இருக்கின்றோம்.

நல்லாட்சி அரசிலும் எமக்கு எதிராக இவ்வாறு பல செயற்பாடுகள் இடம்பெற்றன. எனவே, அநுரவின் அச்சுறுத்தல்களுக்கு நான் அஞ்சவில்லை.

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது குறித்து நீண்ட பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றோம். கட்சிகளின் செயலாளர்களுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு அரசியல் குழு கூட்டத்தில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய சில பிரதான கட்சிகளுடன் சந்திப்புக்கள் இடம்பெற்றிருக்கின்றன.

உள்ளூராட்சி சபைகளுக்கென சட்டமொன்று காணப்படுகின்றது. அவற்றில் சபைகளை அமைப்பதற்கான வழிமுறையொன்றும் பின்பற்றப்படுகின்றது.

அதற்கமைய ஒவ்வொரு சபைகளிலும் பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்டுள்ள தரப்பினரை அடிப்படையாகக் கொண்டு ஆட்சியமைப்பது குறித்த தீர்மானம் எடுக்கப்பட வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தரப்பிலிருந்து சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் கட்சியின் செயலாளர் கொழும்பில் இல்லாததால், எமது கட்சியின் நிலைப்பாட்டை தெரிவிப்பதற்காக நான் அந்தச் சந்திப்பில் கலந்துகொண்டேன். ஒன்றிணைந்து சபைகளை நிறுவும் நிலைப்பாட்டிலேயே ரணில் விக்கிரமசிங்க தரப்பு இருக்கின்றது.

கட்சி செயலாளர்களே இது குறித்து பேச்சுகளை முன்னெடுத்து தீர்மானம் எடுக்க வேண்டும். 2018க்கு முன்னர் இந்தத் தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட போது நாம் நாடாளுமன்றத்தில் அதற்கு எதிராக வாக்களித்தோம்.

ஆனால், அன்று அது தமக்குச் சாதகமாக அமைந்ததால் ஜே.வி.பி. அதனை ஆதரித்தது. இன்று இந்தத் தேர்தல் முறைமை அரசுக்குப் பாதகமாக அமைவதால் ஜே.வி.பி. அதனை ஏற்க மறுக்கின்றது.

எவ்வாறிருப்பினும் அதிக வாக்குகளைப் பெற்றிருந்தாலும் 50 சதவீதத்தை விட அதிக பெரும்பான்மை எதிர்க்கட்சிகளிடம் இருந்தால், சபைகளை அமைக்கும் உரிமை தேர்தல் முறைமையின் பிரகாரம் அரசியல் கட்சிகளுக்கே காணப்படுகின்றது.

எதிர்க்கட்சிகளை அச்சுறுத்துவற்குப் பதிலாக கட்சியின் செயலாளர்களை அழைத்து, சபைகளை நிறுவுவதற்கான திட்டமொன்றை ஜனாதிபதி முன்வைத்திருக்கலாம்.

எவ்வாறிருப்பினும் ஒவ்வொரு சபைகளிலும் மக்கள் ஆணைக்கமையவே தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். நாம் 38 உள்ளூராட்சி சபைகளில் வெற்றி பெற்றிருக்கின்றோம்.

அவற்றில் வெற்றி பெற்றுள்ள சுமார் 700உறுப்பினர்களைவிரைவில்சந்தித்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராயவுள்ளோம்.” – என்றார்.






# யால தேசிய வனவிலங்கு பூங்காவின் வலயங்களை அதிகரிக்க நடவடிக்கை

யால தேசிய வனவிலங்கு பூங்காவில் மேலும் சில வலயங்களை சுற்றுலாப் பயணிகளுக்காக திறப்பதற்கு சுற்றாடல் அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் நெரிசலைக் கையாள்வதற்காகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தம்மிக்க படபெந்தி தெரிவித்துள்ளார்.

அரன்கமுவ எனும் பெயரில் புதிய வலயமொன்றும் தற்போது மூடப்பட்டுள்ள 3 ஆம், 4 ஆம் வலயங்களையும் உடனடியாக திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

மேற்படி பகுதிகளில் சலுகைகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

100,000 ஹெக்டேயர் பரப்பளவு கொண்ட யால தேசிய பூங்காவில் 25,000 ஹெக்டேயர் பகுதி மாத்திரமே சுற்றுலாப் பயணிகளுக்காக திறக்கப்பட்டுள்ளது.

# உர மோசடி தொடர்பில் விசாரணை ஆரம்பம்



தரம் குறைந்த உரம் சந்தையில் காணப்படுகிறதா என கண்டறிவதற்காக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என தேசிய உர செயலகம் தெரிவித்தது.

பொலன்னறுவை பகுதியில் தரம் குறைந்த உரம் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டமையை அடுத்து இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என தேசிய உர செயலகத்தின் பணிப்பாளர் சந்தன லொக்குஹேவகே குறிப்பிட்டுள்ளார்.

மாவட்ட உதவி பணிப்பாளர்களின் ஊடாக இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பொலன்னறுவை, சிறிபுர பகுதியிலுள்ள களஞ்சியசாலையொன்றில் இருந்து 1,565 யூரியா உர மூட்டைகள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

இந்த உர தொகையின் மாதிரிகள் பரிசோதனைக்காக கொழும்புக்கு கொண்டு வரப்படவுள்ளதாகவும் தேசிய உர செயலகத்தின் பணிப்பாளர் சந்தன லொக்குஹேவகே குறிப்பிட்டார்.

இந்த உர மோசடி தொடர்பில் 12 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் தெஹியத்தகண்டிய நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட நிலையில் அவர்கள் எதிர் வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# முகாமைத்துவ பீட புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வுகள் நேற்று யாழில்!







யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு நேற்று 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் என்.கெங்காதரன் தலைமையில், கலாசாலை வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறி சற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

2023 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் 2024ஃ2025 ஆவது கல்வி ஆண்டில் தொழில் நிருவாகமாணி மற்றும் வணிகமாணி கற்கை நெறிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட 540 மாணவர்களும், பல்கலைக் கழகத்தின் பீடாதிபதிகள், பதிவாளர், நிதியாளர் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர் நலனோம்புப் பிரிவி சிரேஷ்ட உதவிப் பதிவாளர் உட்படப் பலரும் இந்தக்ஷ் அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சந்திப்பு பயனுள்ளதாக தங்கள் தரப்புக்கு அமையாது என்பதை முன்கூட்டியே ஊகித்தோ என்னவோ சந்திப்பில் சைக்கிள் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. அதில் பங்குபற்ற வரவில்லை. அவருக்கு சுகவீனம் என்றும், அதிகம் பயணம் செய்ய வேண்டாம் என்று மருத்துவர்கள் ஆலோசனை கூறியிருக்கின்றமையால் அவர் கொழும்பில் தங்கியிருக்கின்றார் என்வும் கூறப்பட்டதாம்.

தமிழ்த் தேசிய பேரவையாக தங்கள் தரப்புக்கு தாங்கள் நிர்வாகத்தை கைப்பற்றமுயலும் சபைகளில் ஆதரவு தரும்படி தமிழ் தேசிய மக்கள் முன்னணி கோரியய போதிலும் அந்த ஆதரவைத் தெரிவிக்க சங்கு கூட்டணியினர் இணங்கவில்லை என்று தெரிகின்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு வடக்குக்கு வெளியே பெரிய அளவு ஆதரவில்லாத நிலையில், அத்தரப்போடு அணி சேருவது, அரசியலில் தங்களுக்குப் பயன்படக்கூடியது அல்ல என்ற நிலைப்பாடு சங்கு கூட்டணியில் இருந்ததாகத் தெரிகிறது.

நீங்கள் தனித்து முன்னிலை பெற்ற சபைகளில் ஆட்சி அமைக்க ஒத்துழைக்க முடியும் என்ற செய்தி சங்கு கூட்டணியினால் சைக்கிள் தரப்புக்கு சாடமாடையாக தெளிவுபடுத்தப்பட்டதாக அறிய வந்தது. மற்றைய இடங்களில் இலங்கை தமிழரசு கட்சியோடு இணங்கிப் போவது தான் தங்கள் நிலைப்பாடு என்ற கருத்து சங்குக் கூட்டணியினால் சாடை மாடையாகக் கோடி காட்டப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

காலையில் இந்த கூட்டம் நடைபெற்ற பின்னர் மதியம் அளவில் யாழ்ப்பாணம், நல்லூர், சங்கிலியன் வீதியில் இலங்கைத் தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் இல்லத்தில் அவரோடும் தமிழரசு கட்சி பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தோடும் இதே சங்குக் கூட்டணித் தரப்பினர் பேச்சு நடத்தினர்.

எல்லா சபைகளிலும் தமிழரசுக்கு ஆதரவு தருவதானால் தமழரசுக் கட்சி முன்னிலை பெற்றுள்ள சாவகச்சேரி பிரதேச சபை, கோப்பாய் பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை உட்பட நான்கு பிரதேச சபைகளில் தங்களுக்கு தவிசாளர் பதவி தரப்பட வேண்டும் என்று சஙகு கூட்டணி சார்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

தமிழரசு கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் இந்த கோரிக்கைகளை நிராகரித்து சீற்றத்துடன் பதில் அளித்தார் என அறிய வந்தது.

'சபைகளில் அதிக ஆசனங்களை பெற்ற தரப்புகளுக்கு தலைமைப் பதவி என்ற பொது உடன்பாட்டின் கீழே ஓர் இணக்கப்பாடு காணப்பட்டு, அதன் அடிப்படையிலேயே இந்தப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இருந்த போதும் இப்போது அதற்கு முரணான கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. வலிகிழக்கு கோப்பாய் பிரதேச சபையை எக்காரணம் கொண்டும் வழங்க முடியாது. அது தொடர்பில் பேசவும் முடியாது. அது பற்றி பேசினால்தான் பேச்சு தொடரும் என்றால் வெளியேறுகிறேன்.' என்ற சாரப்பட சி.வி.கே.சிவஞானம் கருத்துரைத்தார் எனக் கூறப்பட்டது.

அவ்வாறானல் பேச்சு இதனுடன் முடிவடைகின்றதா என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் வினவியே போது, அது உங்கள் முடிவு என சி.வி.கே.சிவஞானத்தால் பதிலளிக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

ஆயினும் நிலைமையை சுமந்திரன் தலையிட்டு இயல்பு நிலைக்குக் கொண்டு வந்தார்.

'சபை நிர்வாகங்களை அமைப்பது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு எடுத்த ஆரம்ப முடிவுக்கு முரணாக உங்களின் – சங்கு கூட்டணியின் – கோரிக்கை இருக்கிறது. இதனை கட்சியிலும் சம்பந்தப்பட்ட சபைகளில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுடனும் கலந்து பேசி பதில் தருவோம்' என்ற சாரப்பட சுமந்திரன் கூறிச் சமாளித்தார்.

நான்கு தவிசாளர் பதவிகளை தமிழரசு கட்சி தரவேண்டும் என்ற கோரிக்கைக்கு தமிழரசு கட்சி பெரும்பாலும் இணங்காது என்று தெரிகிறது. ஆயினும் மாந்தை மேற்கு பிரதேச சபையை சில சமயங்களில் விட்டுக் கொடுக்க தமிழரசு இணங்கக் கூடும். ஆயினும் இந்த முரண்பாட்டினால் தமிழரசு – சங்கு தரப்பு ஆகவற்றின் கூட்டுச் செயற்பாடு முடிவுக்கு வரும் என்று நினைப்பதற்கு அடிப்படையே இல்லை என சில வட்டாரங்கள் தெரிவித்தன.

எந்த மட்டத்திலும் விட்டுக் கொடுப்பை முன்னெடுத்து, இந்த இணக்கப்பாட்டை நகர்த்தி, மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீள நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்பதில் செல்வம், சித்தார்த்தன், வேந்தன், சுமந்திரன் ஆகியோர் முழு முனைப்பாக இருக்கின்றனர். அது நிச்சயம் நடக்கும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

தமிழரசு கட்சி சார்பில் வடக்கில் உள்ளூராட்சி சபைகளில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கான கூட்டம் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது. அதன் பின்னர் சில தினங்கள் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் நாட்டில் இருக்க மாட்டார். குடும்ப விடயமாக அவர் சில தினங்கள் வெளிநாடு செல்லுகின்றார் என அறிய வந்தது. அவர் நாடு திரும்பிய பின்னர்தான் மற்ற விடயங்கள் இனி முடிவாகும்.

ஆயினும் யாழ் மாநகர சபை உட்பட பெரும்பாலான சபைகளுக்கு பட்டியலில் தெரிவான உறுப்பினர்களை தேர்வு செய்து தேர்தல் ஆணையத்துக்கு அறிவிக்கும் நடவடிக்கையை தமிழரசுக் கட்சி மேற்கொண்டு விட்டதாகவும் தெரிய வந்தது.

---

## வடக்கு, கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆட்சி அமைப்பதற்குத் தார்மீக அடிப்படையில் ஏனைய தமிழ், முஸ்லிம் கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என்று கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அக்கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் ஊடகப் பேச்சாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் இணைந்து ஆட்சி அமைப்பது குறித்து ஆராயும் சந்திப்பு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சிகளுக்கு இடையில் நேற்று வெள்ளிக்கிழமை யாழ். கந்தரோடையில் அமைந்துள்ள த.சித்தார்த்தனின் இல்லத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வேந்தன் ஆகியோரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் செல்வராசா கஜேந்திரன், காண்டீபன் மற்றும் தீபன் திலிஷன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

அதன்படி உள்ளூராட்சி சபைகளில் இணைந்து பயணிப்பதற்கான சாத்தியப்பாடு குறித்துத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிநிதிகள் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பிரதிநிதிகள், இணைந்து பயணிப்பதில் தமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை எனவும், இருப்பினும் தமது இரு கட்சிகளும் இணையும் பட்சத்தில் ஒருசில உள்ளூராட்சி சபைகளில் மாத்திரமே ஆட்சி அமைக்க முடியும் எனவும் சுட்டிக்காட்டினர்.

அதனையடுத்து இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் தமது கட்சி ஆகிய மூன்றும் இணைந்து ஆட்சி அமைப்பதற்கான சாத்தியம் குறித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிநிதிகள் கருத்து வெளியிட்டனர்.

இது குறித்து நேற்று வெள்ளிக்கிழமை யாழ். நல்லூரில் உள்ள சுமந்திரனின் இல்லத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற சந்திப்பில் தாம் பிரஸ்தாபித்தாகவும், அது பற்றி கட்சியின் மத்திய குழுவில் ஆராய்ந்து பதிலளிப்பதாகத் தமிழரசுக் கட்சி பதிலளித்ததாகவும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர்களில் ஒருவரான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

அதேவேளை வடக்கு, கிழக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் தமிழ்க் கட்சிகளே ஆட்சி அமைக்க வேண்டும் எனவும், அந்தச் சபைகள் குறிப்பாக தேசிய மக்கள் சக்தியின் வசம் செல்வதற்கு அனுமதிக்கக்கூடாது எனவும் நேற்றைய சந்திப்புகளின்போது மூன்று கட்சிகளின் பிரதிநிதிகளும் உறுதிபடத் தெரிவித்தனர்.

---

## வடக்கு முதல்வர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினாக இருக்கும் சிவஞானம் சிறீதரன், தான் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடமாட்டார் என ஏற்கனவே தெரிவித்திருந்தார். இந்நிலையில், வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராகத் தான் போட்டியிடவுள்ளார் சுமந்திரன் கூறியுள்ளார்.

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர்களை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்கள் நேற்று, யாழ். நல்லூரில் உள்ள சுமந்திரனின் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

"இந்தச் சந்திப்பின்போது அடுத்து வரும் மாகாண சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராகத் தானே களமிறங்கப் போகின்றார் என்று சுமந்திரன் எங்களிடம் கூறினார்." – என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத்தலைவர்களில் ஒருவரான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

"ஆனால், சுமந்திரனின் இந்த நிலைப்பாட்டுக்கு ஆதரவு அல்லது எதிர்ப்பு என்ற விடயங்கள் குறித்து எதுவும் நாங்கள் பேசவில்லை. மேலும் உள்ளூராட்சி சபைகளில் ஒன்றிணைந்து ஆடசியமைப்பது குறித்து இந்தச் சந்திப்பில் பேசப்பட்டாலும் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்குவது தொடர்பில் எதுவும் பேசவில்லை." – என்று சித்தார்த்தன் மேலும் கூறினார்.

# மனைவியைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டு உயிரை மாய்க்க முயன்ற கணவன் கைது!




(க.மகாதேவன்)

கணவன் தனது மனைவியைத் துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் புத்தளம், சிலாபம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விலத்தவ பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

குடும்பத்தகராறு காரணமாக கணவன் தனது மனைவியைத் துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்தியுள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தையடுத்து கணவன் உயிரை மாய்த்துக்கொள்ள முயன்றுள்ள நிலையில் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யோஷித, டெய்சி பாட்டிக்கு எதிரான மனு மீதான விசாரணை ஜூலை மாதம் 11 இல்



யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டியான டெய்சி பொரெஸ்ட் ஆகியோருக்கு எதிரான மனு எதிர்வரும் ஜூலை மாதம் 11 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டியான டெய்சி பொரெஸ்ட் ஆகியோர் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

இதன்போது நீதிமன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சம்பத் மெண்டிஸ் இந்த மனு தொடர்பான சாட்சியங்களை நீதிமன்றில் முன்வைத்திருந்தார்.

யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டியான டெய்சி பொரெஸ்ட் ஆகியோருக்கு எதிராகச் சட்டமா அதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தரணி சம்பத் மெண்டிஸ்ஸினால் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களைக் கருத்தில் கொண்ட நீதிவான் இந்த மனு எதிர்வரும் ஜூலை மாதம் 11 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று உத்தரவிட்டுள்ளார்.

## கொழும்பில் துப்பாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

கொட்டாஞ்சேனை, சுமித்திராராம மாவத்தையில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஆண் ஒருவரும், பெண் ஒருவரும் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொட்டாஞ்சேனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கான பரிந்துரைகளைக் கேட்கின்றது நீதி அமைச்சு




இலங்கையில் நடைமுறையில் உள்ள 1979ஆம் ஆண்டு 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடை (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை இரத்துச் செய்து, புதிய சட்டத்தை உருவாக்குவதற்கான அமைச்சரவை அனுமதிக்கமைய நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவால் தற்போது பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

புதிய மசோதாவை அறிமுகப்படுத்துவதானது, நவீன உலகளாவிய பயங்கரவாத சவால்களை எதிர்கொள்வது, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனிநபர்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தரநிலைகளைக் கடைப்பிடிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அதற்கமைய பொதுமக்களின் கருத்துகள் மற்றும் பரிந்துரைகள் ஏதேனும் இருந்தால் அவற்றை நேற்று முதல் 14 நாள்களுக்குள் அனுப்பி வைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பரிந்துரைகள் அடங்கிய கடிதங்களை நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு, இலக்கம் 19, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு அல்லது legal@moj.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கடித உறையின் இடது மூலையில் "பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கான பரிந்துரைகள்" எனக் குறிப்பிடுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கு பொதுஜன பெரமுன தயாரில்லை

## சாகல காரியவசம் அறிவிப்பு



"உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுக்கொண்ட சபைகளில் கூட்டணி அமைத்து ஆட்சியமைப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயார் இல்லை. அவ்வாறான சபைகளில் மக்களின் தீர்மானத்துக்கமைய செயற்படுவோம்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகல காரியவசம் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்கும் கூட்டணி தொடர்பில் கட்சியின் நிலைப்பாட்டைத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ள சபைகளில், எதிர்க்கட்சிகள் கூட்டணி அமைத்து ஆட்சியமைப்பதற்கான பேச்சுவார்த்தை கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

அதில் எமது கட்சி சார்பில் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ கலந்துகொண்டு, எமது கட்சியின் நிலைப்பாட்டை அங்கு தெரிவித்திருந்தார்.

அதன் பிரகாரம் அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, குறித்த அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடனான சந்திப்பொன்று நடத்த ஏற்பாடு செய்திருந்தது.

அந்தக் கலந்துரையாடலில் நாங்கள் கலந்துகொள்ளவில்லை. ஏனெனில் கூட்டணி அமைத்து உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்கத் தேவையில்லை என்ற நிலைப்பாட்டிலே நாங்கள் இருக்கின்றோம்.

கட்சிஎன்றவகையில்ஸ்ரீலங்காபொதுஜன பெரமுனவினராகிய எங்களுக்கு என்று ஒரு கொள்கை ஒன்று இருக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி என்பது வேறு கொள்கைகளையுடைய கட்சிகள்.

அதனால் ஆட்சியமைப்பதற்கு மாத்திரம் எங்களுக்கு மத்தியில் கூட்டணி அமைக்கத் தேவைப்பாடாது. அவ்வாறன நிலைக்குத் தள்ளப்பட கட்சி என்ற வகையில் நாங்கள் தயார் இல்லை.

அதனால் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்கும்போது, அந்த உள்ளூராட்சி சபைகளில் மக்களின் நிலைப்பாட்டை அறிந்து, தீர்மானம் மேற்கொள்வோம். மாறாகக் கட்சியாகக் கூட்டணி அமைத்து ஆட்சியமைக்க நாங்கள் இணக்கம் இல்லை." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## எதேச்சாதிகாரத்தை நோக்கி.....!

ஜனநாயகத் தேர்தல் பற்றியும் அதில் மக்கள் தெரிவிக்கும் அல்லது வெளிப் படுத்தும் ஆணை குறித்தும் புது வியாக் கியானம் - விளக்கம் - கொடுக்க முனை கின்றார் ஜனாதிபதி அநுரா குமார திஸ நாயக்க.

மக்கள் கருத்தறியும் சர்வஜன வாக் கெடுப்பில் கூட, செல்லுபடியான வாக்கு களில் அரைவாசியை விட ஒரு வாக்கு மேலதிகமாக எடுத்தால்தான் அது மக்கள் ஆணையாக முடிவாகின்றது.

ஒவ்வொரு சபையிலும் வாக்களித்த வர்களை நூறு வீத வாக்காளர்களாகக் கொண்டால், அதில் 50 வீதத்திற்கு மேல் வாக்கு பெற்ற தரப்புத்தான் மக்கள் ஆணை தனக்குரியது என்று உரிமை கோர முடியும்.

49 வீத வாக்கை பெற்றவர் தனக்கு ஆணை வழங்கப்பட்டதாக கூற முடி யாது. எஞ்சிய தரப்பினர. தங்களுக்குள் ஒன்று சேர்ந்தால் 51 வீதம் கொண்டு, தமது தரப்பின் பக்கம்தான் மக்கள் ஆணை என்று அதனை சாய்ந்து விட முடியும்.

இப்படி இருக்க, உள்ளூராட்சி சபைக ளில் ஐம்பது வீதத்துக்கு மேல் அல்லது அறுதி பெரும்பான்மைக்கு மேல் ஆசனங் களைப் பெறாத சபைகளில், மக்கள் ஆணை தங்கள் பக்கம் என்று ஜனாதிபதி குறிப் பிடுகின்றமை ஜனநாயக முறைமையையே கேலிக்கூத்தாக்கும் வேலையாகும்.

அவரது தேசிய மக்கள் சக்தி எல்லா கட்சிகளிலும் விட அதிக ஆசனங்ளை பல சபைகளில் பெற்றிருக்கக் கூடும். ஆனால் அவரது தரப்புக்கு எதிரான தரப்புகள் தங்களுக்குள் ஒன்றுபட்டு, அந்தச் சபை கள் ஒவ்வொன்றிலும் அரைவாசிக்கும் மேற்பட்ட வாக்குகளை அல்லது தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை தங்கள் பக் கம் ஒருங்கு சேர்த்துக் கொள்வார்களா யின் மக்களின் ஆணை அவர்கள் பக்கம் என்பதே ஜனநாயக கோட்பாடாக கருதப் பட வேண்டும்.

இந்தப் பத்தியில் நாம் ஏற்கனவே சுட் டிக் காட்டியபடி ஜனநாயகம் என்பது அட் சரகணித எண்ணிக்கையின் அடிப்படை யில் அமைந்ததுதான். அந்த எண்ணிக்கை எதிரணி பக்கம் சாயுமானால், மக்கள் ஆணை அவர்கள் பக்கம் என்பதை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ள வேண்டும். ஜனநாயக விழுமியத்தின் கீழ் அதுதான் முழுமையான ஒழுங்கு.

சபைகளில் தனித்து அதிக எண்ணிக் கையான உறுப்பினர்களை பெற்றுக் கொள்வது மாத்திரம் மக்கள் ஆணை யாகி விடாது என்பது பழுத்த அரசி யல்வாதியான அவருக்குத் தெரியாத தல்ல. சபையை முழுமையாக கட் டுப்படுத்துவதற்கான அறுதிப் பெரும் பான்மையை தமது கட்சி அல்லது கூட்டு பெறாத வரை அந்த சபையின் ஆணை மக்களால் தங்களுக்கு தரப் பட்டிருப்பதாக ஜனாதிபதி கோருவது பொய் - பித்தலாட்டம் - ஜனநாய கத்தைக் குழி தோண்டி புதைக்கும் அர சியல் தந்திர விளையாட்டுமாகும்.

இவ்விடயத்தில் ஜனநாயகம், அதன் விழுமியங்கள், அதன் உரிமைகள், அதன் அடிப்படைகள் போன்றவை தெரியாத அப்பாவி போல ஜனாதி பதி கதை பேசக்கூடாது.

நிறைவேற்றதிகாரமும், வலிமையான நாடாளுமன்றப் பெரும்பான்மையும், தங்கள் கைகளில் இருக்குமானால் ஜனநாயகத்தை - அதன் கோட் பாட்டை - அதன் விழுமியங்களை - தம் இஷ்டப்படி வளைக்கலாம் என்று அவர் எண்ணுவது பெரும் அபத்தமா கும்.

ஆளும் தரப்புத் தனித்து அறுதிப் பெரும்பான்மை பெறாத சபைகளில், ஆளும் தரப்புக்கு எதிராக எதிர்க் கட்சிகள் ஒன்றுபட்டு, தங்களுக்குள் பெரும்பான்மையை பெற்று, மக்கள் ஆணை தங்கள் பக்கம் என்று வெளிப் படுத்துவார்களாயின் அதுதான் ஜனநா யகத்தின் தீர்ப்பு என்று அதற்குக் கட்டுப்படுவதே நேர்மையான - உண் மையான - ஜனநாயக பூர்வமான - அர சியலும் பண்புமாகும்.

எதிரணிக்கு அவர்களின் ஒற்றுமையி னால் ஜனநாயக வலிமை கூடுகின்ற போது அதை சகிக்கும் பண்பு ஜனாதி பதிக்கும் அவரது கட்சியினருக்கும் இல்லை என்றால் - அந்த ஐக்கியச் செயற் பாடுகளுக்கு எதிராக அவர்கள் அதி காரத்தைப் பிரயோகிக்க முனைகின் றார்கள் என்றால் - அவர்கள் எதேச் சாதிகாரத்தை நோக்கி பயணிக்கின் றார்கள் என்பதுதான் முடிவாகும்.

# போர் நிறுத்தத்தை தொடர்வதற்கு இந்தியா - பாகிஸ்தான் இணக்கம்



மே 10 அன்று இரு நாடுகளும் முடிவு செய்தபடி, எல்லை தாண்டிய அனைத்து இராணுவ நடவடிக்கைகளுக்குமான இடைநிறுத்தத்தை நீட்டிக்க இந்தியாவும் பாகிஸ்தானும் கூட்டாக ஒப்புக் கொண்டுள்ளன.

தொடர்ச்சியான பதட்டங்களுக்கு மத்தியில், இரு நாடுகளின் இராணுவ நடவடிக்கைகளுக்கான பணிப்பாளர் ஜெனரல்கள் (DGMOs) “நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கைகளை” தொடர வியாழக்கிழமை பிற்பகுதியில் முடிவு செய்துள்ளனர்.

PTI செய்திச் சேவையின் அறிக்கையின்படி, பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் இஷாக் டார், பாகிஸ்தான் DGMOs மேஜர் ஜெனரல் காஷிஃப் அப்துல்லா மற்றும் இந்திய DGMOs லெப்டினன்ட் ஜெனரல் ராஜீவ் காய் ஆகியோர் வியாழக்கிழமை ஒரு மெய்நிகர் சந்திப்பில் இது தொடர்பான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து மேற்கண்ட தீர்மானத்துக்கு வந்துள்ளனர்.

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பதிலடியாக, மே 7ஆம் திகதி நள்ளிரவுக்குப் பின்னர் பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்தியா ஆப்ரேஷன் சிந்தூர் என்ற நடவடிக்கையைத் தொடங்கியது.

எல்லைக்கு அருகிலுள்ள இராணுவ தளங்கள் மீது பாகிஸ்தான் ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதலை நடத்தியதை அடுத்து, ஒரு நாள் கழித்து இரு நாடுகளுக்கும் இடையிலான பதட்டங்கள் அதிகரித்தன, அந்த தாக்குதலை இந்தியா முறியடித்தது.

மூன்று நாட்கள் கடுமையான இராணுவ தாக்குதல்களுக்கு பின்னர், மே 10 அன்று பாகிஸ்தான் னுபுஆுள தனது இந்தியப் பிரதிநிதியை அழைத்து எல்லை தாண்டிய அனைத்து வகையான துப்பாக்கிச் சூடுகளையும் நிறுத்துமாறு கேட்டுக் கொண்டதை அடுத்து, இரு நாடுகளும் இரு தரப்பிலிருந்தும் துப்பாக்கிச் சூட்டை நிறுத்த ஒப்புக் கொண்டன.

இருப்பினும், எல்லைக் கிராமங்களில் இருந்து கடுமையான ஷெல் தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக தகவல்கள் வெளியான சில மணி நேரங்களுக்குப் பின்னர் பாகிஸ்தான் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறியதாகவும் குற்றச்சாட்டப்பட்டது.

# 2026ஆம் ஆண்டுக்குள் மாவோயிஸ்டுகளுக்கு முடிவு கட்டப்படும்: அமைச்சர் அமித்ஷா உறுதி



2026க்குள் மாவோயிஸ்டுகளுக்கு முடிவு கட்டப்படுமென மத்திய உட்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.

மாவோயிஸ்டுகள் ஆதிக்கம் உள்ள கரேகுட்டா மலையில் கடந்த ஏப்ரல் மாதம் 21ம் திகதி முதல் மாவோயிஸ்ட் ஒழிப்பு நடவடிக்கை (ஆபரேஷன் சங்கல்ப்) தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நடவடிக்கையின் விளைவாக இதுவரையில் 31 மாவோயிஸ்ட்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மத்திய உட்துறை அமைச்சர் அமித் ஷா கரேகுட்டா மலையில் ஒரு சமயத்தில் சிவப்பு பயங்கரவாதம் கோலோச்சி இருந்தது எனவும், தற்போது இந்திய தேசியக் கொடி பறப்பது பெருமையளிக்கிறது எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் எதிர் வரும் 2026 மார்ச்ச மாதத்திற்குள் மாவோயிசத்தை அழிக்க அரசு உறுதி பூண்டுள்ளது எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

மேலும் மாவோயிஸ்ட்டுகளுக்கு எதிரான இந்த நடவடிக்கையை நமது படைகளால் வெறும் 21 நாட்களுக்குள் செய்து முடிக்கப்பட்டுள்ளது எனவும், இந்த ஆபரேஷனில் எந்த வீரருக்கும் பாதிப்பில்லாதது மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தாம் திட்டமிட்டதை விட மிக அதிகமாகவே செய்து முடித்துள்ளதாகவும், இதனால் தாம் நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இது முடிவின் ஆரம்பம் எனவும், 2026 மார்ச் 31க்குள் மாவோயிசத்தை ஒழிக்கும் இலக்கை தாம் அடைய வுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.





# காசாவில் நிலவும் அவல நிலை குறித்து டொனால்ட் ட்ரம்ப் கவலை வெளியீடு

காசாவில் நிலவும் கடுமையான உணவுப் பற்றாக்குறை குறித்தும் அங்குள்ள மக்களின் அவல நிலை குறித்தும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கவலை வெளியிட்டுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ட்ரம்ப், தனது இரண்டாவது பதவிக் காலத்தில் வளைகுடா நாடுகளுக்கு மேற்கொண்ட முதல் வெளிநாட்டுப் பயணத்தில், இஸ்ரேலைத் தவிர்த்தது உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இந்தநிலையில், அவர் காசா குறித்து இவ்வாறான கருத்தை வெளியிட்டுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேலுக்கும் ஹமாஸ்"க்கும் இடையிலான இரண்டு மாத போர் நிறுத்தம் மார்ச் மாதத்தில் முறிந்ததை அடுத்து, காசா மீது இஸ்ரேல் மீண்டும் முழு அளவிலான தாக்குதலைத் தொடங்கியது.

இதனால், காசாவில் உணவுப் பற்றாக்குறை மேலும் அதிகரித்துள்ளதாக சர்வதேச உதவி நிறுவனங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பில், அபுதாபியில் கருத்து தெரிவித்த ட்ரம்ப் "காசாவில் நிலவும் சூழ்நிலையை நாங்கள் உன்னிப்பாக கவனித்து வருகிறோம். அங்கு ஏராளமான மக்கள் பட்டினியால் வாடுகிறார்கள்.

இந்த விவகாரத்தை நாங்கள் தீவிரமாக கவனத்தில் கொள்வோம்," என தெரிவித்துள்ளார்.

காசாவில் இஸ்ரேல் நடத்திய சமீபத்திய தாக்குதல்களில் 74 பேர் கொல்லப்பட்டதாகவும், தொடர் ஷெல்தாக்குதல்களால் டஜன் கணக்கானவர்கள் இடிபாடுகளுக்கு அடியில் சிக்கியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காசாவில் நிலவும் இந்த அவல நிலையை முடிவுக்கு கொண்டுவர, உலக நாடுகள் உடனடியாக தலையிட வேண்டும் என்று சர்வதேச மனித உரிமை ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடதக்கது.

# இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் காசாவில் 90 இற்கும் மேற்பட்டோர் பலி







காசாவில் இஸ்ரேல் நடத்திய வான் வழித் தாக்குதலில் 90 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசா பகுதியில் இஸ்ரேல் நடத்திய தொடர் இராணுவ நடவடிக்கைகளின் விளைவாக உயிரிழப்புகள் அதிகரித்து வருகின்றன.

இந்தநிலையில், உள்ளூர் மருத்துவ வட்டாரங்கள் வெளியிட்டுள்ள தகவலின்படி, இஸ்ரேலின் வான்வழித் தாக்குதல்களில் இதுவரை குறைந்தது 93 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமையன்று வடக்கு காசா பகுதியில் இஸ்ரேலிய படைகள் மிகக் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டன.

இதில், பீட் லாஹியா நகரமும் அதற்கு அருகாமையில் அமைந்திருக்கும் ஜபாலியா அகதிகள் முகாமும் இந்தத் தாக்குதல்களின் முக்கிய இலக்காக இருந்தன.

இதில், இந்தோனேசிய மருத்துவமனைக்கு குறைந்தது 66 உடல்கள் கொண்டுவரப்பட்டன என அப்போதைய தகவல்கள் வெளியாகி இருந்தன.

அத்தோடு, தெற்கு காசாவில் உள்ள நாசர் மருத்துவமனைக்கு மேலும் 16 உடல்கள் கொண்டு செல்லப்பட்டன என குறிப்பிடப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை இரவு முதல் வெள்ளிக்கிழமை காலை வரை கான் யூனிஸ் நகரம் மற்றும் அதைத் தாண்டி வடக்கு திசையில் அமைந்துள்ள டெய்ர் அல் பாலா புறநகர் பகுதிகள் வரை இஸ்ரேலின் வான் வழித் தாக்குதல்கள் நீடித்தன.

இந்தநிலையில், சமீபத்திய தகவல்களின் படி வியாழக்கிழமை காலை முதல் தற்போது வரை உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 250 ஐ தாண்டியுள்ளதாக உள்ளூர் சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் ‘காலைக்கதிர்’ நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

23

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

ஜே.வி.பியின் மத்திய குழு 1977 இனப் பிரச்சினையைப் பற்றிய கொள்கைப் பிரகடனம் மேற்கொண்ட போது, அதற்கு வித்தியாசமான விளக்கங்கள் தந்து, கடும் போக்கை கடைபிடிக்க விஜயவீரவைத் தூண்டியவர்களில் முதன்மையானவராக இருந்தவர் சோமவன்ஸ அமரசிங்க.

லயனல் போபகே பெப்ரவரி 1984இல் கட்சியிலிருந்து விலக, பொதுச் செயலாளர் பதவியை ஏற்ற நாளிலிருந்து, மரணம் வரைக்கும் அந்தக் கடும் போக்கிலிருந்து மாறாது, பின்னைய அரசியலிலும் தமிழர் அபிலாசைகளை நிராகரித்து, மாகாண அமைப்புக்கும் அதிகாரப் பரவலாக்கத்துக்கு இடம் அளிக்காது, அவை கை கூடாத முறைகளிலே தனது அரசியல் காய் நகர்த்தல்களை ஜே.வி.பிக்காக நடத்தியவர் சோமவன்ஸ அமரசிங்க.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பதவி இழந்த பின், 1994 இல் நாடு திரும்பி, ஜே.வி.பி. தலைமைப் பொறுப்பை ஏற்று, 1994 ஓகஸ்டில் நடந்த தேர்தலில் தேசிய விடுதலை முன்னணி (National Salvation Front) என்ற பெயரில் ஜே.வி.பி. போட்டியிட்டது. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஓர் இடத்தில் வெற்றி பெற்று, பின்னர் ஜே.வி.பி. தனது சட்ட ரீதியான உரிமைகளைப் பெற மே 1995இல் தங்காலையில் ஒரு சம்மேளனம் நடத்தி, தங்கள் அரசியல் பாதுகாப்புக்காக சந்திரிகா பண்டாரநாயக்காவுடன் இணக்கம் கண்டு, அவரது ஐக்கிய மக்கள் முன்னணியுடன் (United People Front) 2001 பொதுத் தேர்தலில் கூட்டாக போட்டியிட்டது. அத்தேர்தலில் வென்ற ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சி அரசு, விடுதலைப் புலிகளுடன் சமரச பேச்சுக்களை நோர்வேயின் அனுசரணையில் தொடங்கி முன்னெடுத்த போது அதனை குழப்பும் விதத்தில் ரணிலின் அரசை நேரத்துடன் ஜனாதிபதி சந்திரிகா கலைத்து, அந்தச் சமரச முயற்சியை முடக்கினார். 2004 பொதுத் தேர்தலில் ஜே.வி.பி. சந்திரிகாவுடன் கூட்டுச் சேர்ந்து 39 ஆசனங்களை



தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

நாடாளுமன்றத்தில் வென்று, நான்கு அமைச்சுப் பதவிகளோடு அரசில் பங்காளியானது. அந்தச் சமயத்தில் சுனாமிப் பாதிப்பை ஒட்டி சந்திரிகா அரசு புலிகளோடு இணக்கமாகச் செயல்பட விரும்புகிறது என்று காட்டி, அதற்கு எதிராக அந்த ஆட்சிக்குக் குழப்பத்தை ஏற்படுத்தியது.

பின்னர் 2005 நவம்பரில் மஹிந்த ராஜ பக்ஷ ஜனாதிபதி தேர்தலைச் சந்தித்தபோது அவருக்கு முழு ஆதரவு தந்து அவரது வெற்றிக்கு உதவியது.

1987-இல் உருவெடுத்த ஜே.வி.பியினரின் மூன்றாவது பரிமாணத்தில் முன்னர் குறிக்கப் பட்டமை போல் இந்தியாவுக்கும், தமிழர்களுக்கும் எதிரான உக்கிரமும் வன்மமும் ஆவேசமும் கொண்டவர்களாக அவர்கள் உருவெடுத்தனர். அவர்களின் இந்தப் பரிமாணத்தின் கொள்கைகளில் இந்தியா தனது பிராந்திய நலன்களுக்காக உள்நாட்டு விடயங்களில் தலையிடுகிறது, இனப் பிரச்சினை என்று எதுவுமே தமிழ் மக்களுக்குக் கிடையாது, எதுவித பிரதேசங்களும் அவர்களது அதிகாரங்களில் அமைவதாக இருப்பது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது, எது வித சுயாட்சிக்கும் இடமில்லை, அப்படி அமையக்கூடாது, அவர்களது இடதுசாரி மார்க்சியப் பார்வையில் – ஆனால் ஸ்டாலினின் ஆட்சி முறை போன்று – அதிகாரங்கள் ஓர் அரசிடம் முழுமையாக இருப்பதுதான் சிங்கள மக்களுக்குப் பாதுகாப்பு என்ற நிர்ப்பந்தமும் அடித்தளமாக்கப்பட்டது.

இதுவரை சிறிது விரிவாக குறிக்கப்பட்ட 1984 இல் இருந்து முக்கியமாக 1991 வரை, பின் சிறிதளவில் நடந்த வன்முறைகள் யாவுமே ஜே.வி.பி. அங்கத்தினர்கள்தான் தேசாபிமானிகள், சிங்கள – பௌத்த தேசியத்தின் விடுதலைக்காக அரண்கள் என்ற பரப்புரைகளில் ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்ற நடந்தவை. ரவி ஜெயவர்த்தனா குறியீடு செய்தமை போல, இவர்களில் ஒருவரும் தனியாகவோ அன்றில் அவர்களது இராணுவப் பிரிவான தேசப்பிரிய ஜனதா வியாபாரய (DJV) அமைப்பாகவோ யுத்தப் பிரதேசத்தில் நேரடியாக விடுதலைப் புலிகளுடன் போரிடவில்லை. அதற்காக வந்த அழைப்புகளைக் கூட நிராகரித்திருந்தார்கள்.





1987 ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட தினங்களில்தான் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார ஜே.வி.பியில் இணைந்தார். அப்போது அவருக்கு 19 வயது. அந்த வயது இளைஞரிடையே இருந்த உணர்ச்சி, அவரது ஒன்றுவிட்ட சகோதரரால் தூண்டப்பட்டு தீவிரமாக, அவர்களுடன் பணியாற்றினார். பேராதனைப் பல்கலைக்கழக மாணவனாக இருந்ததால் ஜே.வி.பி. மாணவ அமைப்பான சோசலிச மாணவர் கூட்டில் இருந்து கண்டிப் பகுதிகளில் இரகசியமான நடவடிக்கைகளில் ஈடுபட்டார். முக்கியமாக ஜே.வி.பியின் தேசப் பிரேமைஜனதா வியாபாரயவின் மறைவிடங்களுக்குச் செய்திகளை நேரடியாக பரிமாறியதுதான். 'அரவிந்த' என்ற பெயரில் இயங்கிய அவரின் தொடர்புகள் படையினரின் விழிப்புணர்வு குழுக்களுக்கு தெரிய வர கண்டிப் பகுதிகளில் இருந்து வெளியேறி, வேறு இடங்களில் பதுங்கிய காலங்களில் அவர் தேடப்பட்டவராக, உறவினர்களுக்கு பாடம் படிப்பிப்பதற்காக தம்புத்தேகமவில் இருந்த பெற்றோர்களின் சிறிய வீடு எரிக்கப்பட்டு, அவரது ஒன்று விட்ட சகோதரர் சுனில் திஸநாயக்காவும் பிடிக்கப்பட்டு, சித்திரவதைகளின் பின் கொல்லப்பட்டு, தந்தையும் மறைந்தார். ஆயினும் பதுங்கி இருந்தமையால், அவர்களின் மரணச் சடங்குகளில் பங்குபற்றவோ, தந்தையின் கடமைகளைக் கூட நிறைவேற்றவோ சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை. ஜே.வி.பியினருக்கு எதிரான வேட்டைகள் சிறிது தணிந்த போது வெளியில் உலாவத் தொடங்கி, களனிப் பல்கலைக்கழகத்திற்கு மாறி, தனது பட்டப் படிப்பை 1995 இல் முடித்தார்.

ஜே.வி.பிக்கு சந்திரிகா பண்டார்நாயக்கா தர விரும்பிய ஆதரவால் அவர்களுக்கு எதிரான தடையை 1994 இல் நீக்க, அது சோமவன்ஸ அமரசிங்க லண்டனில் இருந்து நாடு திரும்ப வழி வகுத்தது. ஜே.வி.பியை மீளக் கட்டி எழுப்புவதில் சோமவன்ஸ் அமரசிங்கவின் நம்பிக்கைக்கும் பிரியத்திற்குமுரிய பங்காளியானார் தற்போதைய

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

ஜனாதிபதி அநுரகுமார. இந்தக் காலப்பகுதியில் ஜே.வி.பி. வகுத்த கொள்கைகள் மற்றும் அதற்கான தீர்மானங்களின் அடிப்படைகளில் அதனை ஜே.வி. பியினது நான்காவது பரிமாணமாகப் பார்க்கலாம்.

சோமவன்ஸ அமரசிங்கவின் வழிகாட்டலில் வளர்ந்த அநுரா அவரது நம்பிக்கையாளராக 1995 இல் பட்டப் படிப்பை முடித்ததும், சோசலிஸ் மாண வர் கூட்டின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப் பட்டு, மிக விரைவில் அவர்கள் பல்கலைக்கழகங்க ளுக்கு இடையிலான மாணவர் கூட்டமைப்பையும் (Inter University Students Federation) தங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். அநுரா ஜே.வி.பியின் மத்திய குழு உறுப்பினராக 1996லும், அரசியல் குழுவுக்கு 1998 இலும் நிய மிக்கப்பட்டார்.

இவை நடைபெறும் வேலைகளில் ஜே.வி.பி. தங்களை நிலைநிறுத்திக் கொள்ள எடுத்த அவர் களின் அரசியல் நிலைப்பாடுகளையும், அந்தக் காலகட்டங்களில் இருந்த அரசியல் பரப்பையும் புரிதல் வேண்டும்.

1994 ஜனாதிபதி தேர்தலுக்காக, பிரேம தாஸவின் கொலைக்குப் பின் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் காமினி திஸநாயக்க போட்டியிட நியமிக்கப்பட்டு இருந்தார். அதற்கு முன்னர் பிரேம தாஸவுடன் காமினி திஸநாயக்கவுக்குப் பிணக்கு கள் இருந்து, ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து அவர் வெளியேறி, லலித் அத்துலத் முதலியின் பரப்போடு இணைந்து செயல்பட்டவர். கட்சியி





டையே அந்தப் பிணக்குகள் தேர்தலுக்காக தீர்க் கப்பட்டு, பஞ்சிகாவத்தையில் 7 அக்டோபர் 1994 தனது பிரசாரத்தை காமினி திஸநாயக்க தொடங் கிய போது மேடையில் அவரை பிரேமதாஸவின் விதவை ஹேமா பிரேமதாஸவும், மகன் சஜித் தும் மாலையிட்டு வரவேற்றனர். அவரது பேச்சில் பொருளாதாரம் முறையாகக் கையாளப்பட வேண்டும், அதற்கு ஏதுவான கட்சி தங்களதுதான் எனவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சாடி, அவர்களது கொள்கைகள் 180 பாகை சுற்றித் திரும்பினால் ஒழிய, நாட்டிற்கு சுபீட்சம் வராது என்று கூறி, இனப்பிரச்சினையை ஒட்டிக் குறிப் பிடுகையில், அதற்கு இராணுவத் தீர்வு ஒன்று மேற் கொள்ள முடியாது, ஏதோ ஒரு விதத்தில் பேசித் தீர்க்கக் கூடிய வழிகளையே பார்க்க வேண்டும் என்று தெரிவித்தார்.

தானே அடுத்த ஜனாதிபதியாக வருவேன், தனக்கு அரசை நடத்தும் மக்கள் கூட்டணி (Peoples Alliance) உடன் இணங்கி வேலை செய்வது கடினமாக இருக்க முடியாது, சந்திரிகா பண்டார நாயக்கா தமிழ் பிரச்சினைகளை ஒட்டி எடுத் திருக்கும் பேச்சு வார்த்தை முயற்சிகளை ஆதரிப் பேன் என்பதை மக்களுக்கு அறிவித்தலாக வைத்தார். எனினும் 23 அக்டோபர் 1994 இல் கிராண்ட்பாஸ் தொட்டலங்காவில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் காமினி திஸநாயக்காவும் மேலும் 53 பேரும் தற்கொலை குண்டுதாரி யினால் கொல்லப்பட்டனர்.

சந்திரிகா பண்டார்நாயக்காவின் அரசு விடுத லைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்து இருந்ததால், அவை பற்றி பிரசார மேடைகளில் வெளிப்படுத்துவது அல்லது தெரி விப்பது எவ்விதமான தாக்கங்களை தரும் எனக் கருத்துக் கணிப்புகள் கட்சியினால் நடந்து கொண்டிருந்தன. பொதுவான குத்து மதிப்பான கருத் துக்கணிப்பை தென்பகுதியில் சிங்கள பௌத்தரின் உறைவிடங்கள் என கருதப்பட்ட இடங்களில் நடத்தி, அனேகமான சிங்கள மக்கள், பெருவாரியான

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

தமிழ் மக்களைப் போல சமாதானத்துக்காகத்தான் ஏங்குகிறார்கள் என்ற செய்தியைப் பெற்றனர். இந்த கருத்துக்கணிப்பை சந்திரிகா பண்டாரநாயக்கா மிக அழகாகவும் ஆணித்தரமாகவும், வானொலி களிலும் தொலைக்காட்சிகளிலும் 'நான் ஒருபோதும் நாட்டைத் துண்டு போட இடமளியேன், ஆனால் தற்சமயம் அரசியல் சூழ்நிலைகளில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவதைத் தவிர வேறு வழிகள் இல்லை, தாண்டிக்குளத் திற்கு அப்பால் வடமாகாணத்தின் பெரும் பகுதி அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றது, ஆனாலும் தான் இப்படியான பேச்சுவார்த்தைக்குப் போவது சில சிங்களப் பேரினவாதிகள் இடையே மனக்கொதிப்பை ஏற்படுத்தி உள்ளது' என்றார்.

பின்னர் தனது ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தை அநுராதபுரத்தில் தொடங்கிய போது சந்திரிகா மேலும் வடக்கில் நடக்கும் யுத்தம் இந்த நாட்டின் துக்ககரமான சாபக்கேடு, அப்படியான இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வால் முடிவு ஒன்றை அடைந்து விட முடியாது, ஆதலால் தான் பேச்சுவார்த்தைகளை தொடங்கியதாகவும், அது நல்ல நம்பிக்கையான சூழ்நிலைகளையும் நல்லெண்ணத்தையும் ஏற்படுத்தி உள்ளது, ஆனாலும் இந்த அரசாங்கம் என்றுமே நாட்டைப் பிரிப்பதற்கு ஒத்துக் கொள்ள மாட்டாது என பலத்த கர கோஷங்களுக்கு இடையில் அறிவித்தார்.

தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் இவர்கள் இரண்டு பேரினதும் பேச்சுக்களுக்கு பின்னரே அவர்களுக்கு எதிரான போஸ்டர்கள் கொழும்பு பகுதிகளில் முக்கியமாக – சந்திரிகாவுக்கு குங்குமப்பொட்டு வைக்கப்பட்ட மாதிரியில் – பம்பலப்பிட்டிய பகுதியில் ஒட்டப்பட்டது.

ஆக, இனப்பிரச்சினை ஒன்று இருப்பதனை ஏற்றுக் கொண்டு, அதற்கு இராணுவத் தீர்வு சரியாகாது, பேச்சுவார்த்தைகளிலேயே இந்தத் தீர்வும் முன்னெடுக்கப்பட வேண்டும் எனப் பெரும்பான்மைக் கட்சிகள் அறிவித்ததை தெரிந்து கொண்டுதான் ஜே.வி.பி. சந்திரிகா பண்டாரநாயக்காவுக்கு ஆதரவு தர முன் வந்தது. தங்களது சந்தர்ப்பவாத அரசியலின் முன்னெடுப்பாகவும், அதன் பயனாகவும், அநுரா ஜே.வி.பி. தேசிய பட்டியலில் இருந்து 2000 ஆம் ஆண்டு தேர்தலின் முடிவுகளில் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். அதேபோல் 2001 ஆம் ஆண்டு தேர்தலிலும் அங்கத்தினராகும் வாய்ப்புக் கிட்டியது.

'நாகங்கள் கரந்துதான் உறையும்' என்று சொல்வார்கள்.

(தொடரும்)

# தேசிய மக்கள் சக்தி அரசைக் கவிழ்க்க ரணிலைச் சூழ்வது நகைப்பிற்குரியதாம்

## யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவிப்பு

(த.சுபேசன்)

சிறப்பாகச் செயற்பட்டு வருகின்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை கவிழ்க்க எதிர்கட்சிகள் மக்களால் விரட்டியடிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவைச் சூழ்வது நகைப்புக்குரிய விடயம் என தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.




நேற்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:–

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடந்து முடிந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் 266சபைகளில் பெரும்பான்மையைப் பெற்றுள்ளது.

முன்னைய அரசாங்கங்கள் உள்ளூராட்சிசபைகளில் இவ்வாறான வெற்றியைப் பெற்ற வரலாறு இல்லை.

இந்நிலையில் மக்கள் ஆணையைப் பெறாத கட்சிகள் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஒன்றுசேர்கிறார்கள் என்ற செய்தி பேசுபொருளாக காணப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவை நாட்டு மக்கள் அடியோடு விரட்டியடித்தனர்.

நாம் மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்தினோம்.

கடந்த காலத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை பிற்போட்டவர்தான் இந்த ரணில் விக்கிரமசிங்க.

அவ்வாறான நிலையில் இன்று ரணில் தலைமையில் அணி திரள்வதான மாயையை ஏற்படுத்துகின்றனர்.

மக்கள் ஆணையைப் பெற முடியாதவர்கள் வேறு வழியின்றி தமக்குள் அணி சேர்கின்றனர்.

முதலில் மக்களின் ஆதரவைப் பெறுங்கள்.

நாம் மக்கள் எமக்கு வழங்கிய ஆணையைக் கொண்டு நாட்டினை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பணியில் ஈடுபடுகிறோம்.

மக்கள் ஆணையைப் பெறாதவர்களுடைய செயற்பாடுகளை நாம் கண்டு கொள்ளப்போவதில்லை.

தேசிய மக்கள் சக்தி உள்ளூராட்சித் தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளது.அதனைக் கொண்டு சிறப்பான சேவையை வழங்குவோம்.

– என மேலும் அவர் தெரிவித்தார்.



# கனிய மணல் அகழ்வுக்கு மக்கள் அனுமதி பெற நேற்று மன்னார் சௌத்பாரில் திடீரெனக் கூட்டம்

**(மன்னார் நிருபர்)**

மன்னாரில் கரையோர பகுதிகளில் கனிய மணல் அகழ்வுக்கு மக்கள் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையில் மன்னார் தீவு பகுதியில் கனிய மணல் அகழ்வு முன்னெடுப்பது தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை காலை சௌத்பார் மன்னார் பகுதியில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டக் கடற்தொழில் உதவி பணிப்பாளர் ரமேஷ் கன்னா தலைமையில் இடம்பெற்ற இந்தஜ் கலந்துரையாடலில் கணிய மணல் அகழ்வை முன்னெடுக்கும் நிறுவனத்தின் பிரதிநிதிகள் மற்றும் அப்பிரதேசத்தில் உள்ள மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் அப்பகுதி மக்களும் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடல் திடீரென ஏற்பாடு செய்யப்பட்டமை தொடர்பாக இப்பகுதி மக்கள் தமது விசனத்தைத் தெரிவித்தமையோடு, இப்பிரதேச மக்களின் முழுமையான சம்மதம் இன்றி இப்பிரதேசத்தில் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்க தாம் அனுமதிக்க மாட்டார்கள் எனவும் தெரிவித்தனர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட பலர் கணிய மணல் அகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்த நிலையில் கூட்டம் தீர்மானம் இன்றி நிறைவடைந்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் கருத்து தெரிவிக்கையில் –

கனிய மணல் அகழ்விற்கு மக்களின் அனுமதி பெற்றுக் கொள்வதற்காக இந்தக் கலந்துரையாடல் திடீர் என ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் போது மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதாகவும், மக்களின் கஷ்டங்களை போக்குவதாகவும், அவர்கள் கூறி மக்களை மயக்கி, அனுமதி பெற்றுக் கொள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.

கனிய மணல் அகழ்வினால் இக் கிராமம் முழுமையாக பாதிக்கப்படும்.

எமது கிராம கரையோரப்பகுதியில் கனிய மணல் அழ்வுக்காக எங்களிடம் அனுமதி கேட்கின்றனர்.

அனுமதி வழங்கினால் மக்கள் இங்கே வாழ முடியாத நிலை ஏற்படும். இதனால் நாங்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே இப்பகுதியில் கனிய மணல் அகழ்வுக்கு நாங்கள் எதிர்ப்பை தெரிவிக்கின்றோம். – என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.









# தண்ணிமுறிப்புக் கிராம மக்களை மீள்குடியேற்றி அகதி வாழ்விற்கு உடன் முற்றுப்புள்ளி வையுங்கள்

## ரவிகரன் எம்.பி. கோரிக்கை






**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு – கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட, தண்ணிமுறிப்புக் கிராம மக்களின் அவலங்கள் நிறைந்த அகதிவாழ்க்கை முற்றுப்பெறவேண்டுமெனத் தெரிவித்த வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், உடனடியாகத் தண்ணிமுறிப்புக் கிராமத்தில், அக்கிராமத்திற்குரிய தமிழ் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென வும் கோரிக்கை விடுத்துள்ளார்.

தண்ணிமுறிப்புப் பகுதி மக்களின் அழைப்பினை ஏற்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் நேற்று முன்தினம் தண்ணிமுறிப்புப் பகுதிக்குச் சென்று, பூர்வீகதண்ணிமுறிப்புக்கிராமத்தைப் பார்வையிட்டார். தண்ணிமுறிப்புக் கிராம மக்களுடனும் கலந்துரையாடினார்.

இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

முல்லைத்தீவு – கரைதுறைப்பற்றுப் பிரதேசத்திலுள்ள தமிழர்களின் பூர்வீக கிராமமான தண்ணிமுறிப்பு இதுவரையில் மீள்குடியமர்த்தப்படவில்லை.

தமிழர்களின் பூர்வீக தண்ணிமுறிப்புக் கிராமத்தில் பன்னெடுங்காலமாக மிகப்பாரிய நீர்பாசனக் குளமான தண்ணிமுறிப்புக் குளம் காணப்படுகின்றது. ,த் தண்ணிமுறிப்புக் குளத்தோடு சேர்ந்திருந்த கிராமமே தண்ணிமுறிப்புக் கிராமமாகும்.

இக்கிராமத்தில் பாடசாலை, முன்பள்ளி, உபதபாலகம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளுடன் பொதுப் போக்குவரத்து சேவைகளும் காணப்பட்டுள்ளன.

இந்தப் பகுதி மிகஅதிகமான நெற்பயிற்செய்கை செய்யப்படுகின்ற பல்லாயிரக்கணக்கான ஏக்கர் வயலும் வயல் சார்ந்த இடமாகக் காணப்படுவதால் நெற்களஞ்சியசாலையும் இங்கு இருந்துள்ளது.

இவ்வாறாக தன்னிறைவுடன், செழிப்பான கிராமமாக தண்ணிமுறிப்புக் கிராமம் இருந்துள்ளது.

இங்கிருந்து இடம்பெயரும்போது இப்பகுதியில் 56குடும்பங்கள் இருந்தன எனச் சொல்லப்படுகின்றது.

தற்போது 150குடும்பங்களுக்கு மேல், குடும்பங்கள் பெருகி, ஆங்காங்கே அகதிகளாக குடியிருக்கும் அவலநிலையை எதிர்நோக்கியுள்ளனர்.

இப்பகுதி மக்கள் தங்களை தமது சொந்த இடத்தில் மீள்குடியமர்த்தி, தங்களுக்குரிய வசதிவாய்ப்புக்களைச் செய்துதருமாறு தொடர்ச்சியாகக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான சூழலில் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த தண்ணிமுறிப்பு கிராமப் பகுதிகளில் தற்போது வனவளத் திணைக்களம் மற்றும் தொல்லியல் திணைக்களம் என்பன எல்லைக்கல் லிட்டு அபகரிப்புச்செய்கின்ற நிலமைகளே ,ங்கு காணப்படுகின்றன. இவ்வாறான ,னவாத அரசுகளின் அத்துமீறிய அடாவடித்தனமான செயற்பாடுகளால் தண்ணிமுறிப்புக் கிராமமக்கள் இதுவரையில் மீள்குடியமர்த்தப்படவில்லை.

தற்போதும் அங்கு எமது மக்கள் வாழ்ந்தமைக்குரிய கட்டடச் சிதைவுகள், பயன்தருமரங்கள், வேலிகள் என்பன அடையாளங்களாகக் காணப்படுகின்றன.


இவ்வாறிருக்கும்போது எமது மக்களுடைய பூர்வீக வாழிடமான தண்ணிமுறிப்புக்கிராமத்தில், அந்த மக்களை மீள்குடியமர்த்தாமைக்கான காரணமென்ன, இந்த நிலத்திற்கு எவ்விதத்திலும் தொடர்பில்லாத வேறு குடியேற்றங்கள் எதனையாவது இங்கு மேற்கொள்ளப்போகின்றனரா என இந்த மக்கள் எம்மிடம் கேட்கின்றனர்.

எமது மக்களுடைய ,ந்தப் பூர்வீக வாழ்விடத்தில் அவர்களை மீள்குடியமர்த்துவதுடன், வசதி வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.

இதுதொடர்பில் உரியவர்களின் கவனத்திற்குகொண்டுவந்து, இந்த மக்களை மீள்குடியேற்றுவதற்கு உரிய தரப்பினருக்கு அழுத்தங்களைப் பிரயோகிப்பேன்.

தொடர்ந்தும் இந்த மக்கள் அகதிகளாக அவலங்களோடு வாழ்வதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

கடந்த 1984ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த ,ந்த மக்கள் மீண்டும் குடியேறியநிலையில், 1991ஆம் ஆண்டு மீண்டும் இடப்பெயர்வைச் சந்தித்தனர். இந்நிலையிலேயே இப்பகுதிமக்களை இதுவரையில் மீள்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே இந்த மக்களை உடனடியாக மீள் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார்.




# இலங்கையில் பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தை தொடர ஜெனிவாவில் இம்முறையும் முடிவு தேவை

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தல்

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் "பொறுப்புக்கூறல் செயற்றிட்டம்" எதிர்வரும் செப்டெம்பர் மாதக் கூட்டத்தொடரில் மீள புதுப்பிக்கப்படவேண்டும். இசைப்பிரியா போன்ற பெண்கள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார் உள்ளடங்கலாக பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதியை நிலைநாட்டுவதற்கு அச்செயற்றிட்டம் தொடரவேண்டியது மிக அவசியம் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் மூன்று தசாப்த கால யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு நாளைய தினத்துடன் (18 ஆம் திகதி) 16 வருடங்கள் பூர்த்தியாகும் நிலையில், அதனை முன்னிட்டு மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

இலங்கை அரசாங்கத்தினால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தோற்கடிக்கப்பட்டு, நாட்டில் 26 வருடகாலம் நிலவிய யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு நாளைய தினத்துடன் 16 வருடங்கள் பூர்த்தியடைகின்றன. ஆனால் யுத்தம் முடிவுக்கு வந்து நீண்டகாலம் கடந்திருக்கின்ற போதிலும், பாதிக்கப்பட்ட தமிழ் பெண்களின் நீதிக்கான போராட்டம் இன்னமும் தொடர்கிறது.

யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்பினரும் எண்ணிலடங்கா மீறல்களில் ஈடுபட்டனர். யுத்தத்தின் இறுதி வாரங்களில் அரச படையினரால் பிடிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தை சேர்ந்த பெண் போராளிகள் மற்றும் தமிழ் பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டு, கொல்லப்பட்டனர். இராணுவத்தினர் அதனை தமக்கான யுத்த வெற்றிக் கேடயங்களாகக் கருதி புகைப்படங்கள் எடுத்தும், ஒளிப்பதிவு செய்தும் வைத்திருந்தனர். அவற்றில் கொல்லப்படுவதற்கு முன்னர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கக்கூடும் எனக் கருதக்கூடிய வகையில் சடலம் கண்டறியப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செய்தி வாசிப்பாளர் இசைப்பிரியாவின் புகைப்படமும் உள்ளடங்குகிறது.

இவ்வாறு அரச அனுசரணையுடன் தமிழர்களுக்கு எதிராக பாலியல் அத்துமீறல்கள் நிகழ்த்தப்பட்டன. யுத்தத்தின் பின்னர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ்ப் பெண்கள் மற்றும் ஆண்கள் பலர் பாதுகாப்புப் படையினரால் பாலியல் ரீதியிலான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இருப்பினும் இலங்கையில் ஆட்சிபீடமேறிய அரசாங்கங்கள் பாலியல் ரீதியான வன்முறைகளிலும் சட்டவிரோத படுகொலைகள், சித்திரவதைகள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்படல்கள் உள்ளிட்ட மிக மோசமான மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்ட பாதுகாப்புப் படையினரைப் பொறுப்புக்கூறச் செய்வதற்குத் தவறியிருக்கின்றன.

அதேவேளை யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வட, கிழக்கு மாகாணங்களில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் இராணுவமயமாக்கல் நடவடிக்கைகள், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த முன்னாள் பெண் போராளிகள் மீண்டும் பாலியல் அத்துமீறல்களுக்கு உள்ளாக்கப்படக்கூடிய அச்சுறுத்தலைத் தோற்றுவித்துள்ளது.

உண்மையையும், சர்வதேச நீதியையும் கோரி பல வருடகாலமாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார் மற்றும் மனைவிமார் உள்ளிட்ட பெண்கள் அச்சுறுத்தல்களுக்கும், மீறல்களுக்கும், பாலியல் ரீதியிலான துன்புறுத்தல்களுக்கும் முகங்கொடுத்து வருகின்றனர்.

இலங்கையில் குற்றவாளிகள் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு தொடர்வதன் காரணமாக பாதிக்கப்பட்ட தமிழர்கள் உள்ளக நீதிப்பொறிமுறையில் நம்பிக்கை இழந்திருப்பதுடன் அந்நீதியை வேறு இடங்களில் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். அதேபோன்று சர்வதேச குற்றங்களில் ஈடுபட்ட இலங்கையை விசாரணைக்கு உட்படுத்துவதற்கு சகல வடிவங்களிலுமான நீதி அதிகார வரம்பெல்லையைப் பயன்படுத்தவேண்டியது அவசியம் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இவ்வாறானதொரு பின்னணியில் குற்றமிழைத்தோருக்கு எதிராக வழக்குத்தொடர்வதற்கும், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கும் வாய்ப்பளிக்கக்கூடிய ஆதாரங்களைத் திரட்டுகின்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் "இலங்கை பொறுப்புக்கூறல் செயற்திட்டம்" மாத்திரமே தற்போது எஞ்சியிருக்கின்ற ஒரேயொரு வழியாகும்.

அச்செயற்திட்டம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கூட்டத்தொடரில் புதுப்பிக்கப்படுவதுடன், அதனை இலங்கை அரசாங்கம் ஆதரிக்க வேண்டும். இசைப்பிரியா போன்ற பெண்கள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார் உள்ளடங்கலாக பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான நீதியை நிலைநாட்டுவதற்கு அச்செயற்திட்டம் தொடரவேண்டியது மிக அவசியமாகும். - என அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.



# பழம் ஏற்றி வந்த கப் வாகனம் 60 அடி பள்ளத்தில் பாய்ந்தது

(மஸ்கெலியா விசேட நிருபர்)

ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் பட்டபுரூட் பழங்கள் ஏற்றி சென்ற கப் ரக வாகனம் வீதியை விட்டு விலகி 60 அடி பள்ளத்தில் பாய்ந்துள்ளது.

இந்த விபத்து நேற்று 16 ஆம் திகதி அதிகாலை நேரத்தில் ஹட்டன் ஸ்ரேதன் தோட்ட பகுதியில் இடம் பெற்றுள்ளது.

விபத்தில் கப் வாகன சாரதியும் அதில் பயணம் செய்த மேலும் ஒருவரும் காயமடைந்த நிலையில் வட்டவளை வைத்திய சாலையில் அனுமதிக்க பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் பகுதியில் உள்ள தோட்டங்களில் பட்டர்புரூட் பழங்கள் பெற்று அதனை தலைநகர் கொழும்பில் விற்பனைக்குக் கொண்டு சென்ற வேளையில் இந்த அனர்த்தம் ஏற்பட்டு உள்ளது என ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

அனர்த்தம் பற்றிய விசாரனைகளை ஹட்டன் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

அனர்த்தம் நிகழ்ந்த வேளையில் கப் வாகனத்தில் நால்வர் பயனம் செய்த தாக முதற் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

# தொழிலதிபர் சுலக்சனின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் முள்ளிவாய்கால் கஞ்சி




யாழ்ப்பாணத்தில், பிரபல தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சனின் ஏற்பாட்டில் ஐந்து இடங்களில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டது.

யாழ்ப்பாணம் சின்னக்கடை பகுதி, கோப்பாய், வேலணை உள்ளிட்ட இடங்களில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் மண்ணில் இனப்படுகொலைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த கால பகுதியில் பொருளாதார தடைகள், யுத்ததின் உக்கிரங்களால், ஒருவேளை சாப்பாட்டிற்கே மக்கள் பெரும் இடர்களை சந்தித்து வந்தனர். அதன் போது அவர்களின் பசியாற்றியது உப்பில்லா கஞ்சியே.

அந்த மக்கள் எதிர்கொண்ட இன்னல்களை எமது அடுத்த சந்ததிகளுக்கும் கடத்தும் முகமாகவே முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டது.

முள்ளிவாய்க்கால் வாரத்தில் முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்டவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கொள்கிறோம் என்று சுலக்சன் இதன்போது தெரிவித்தார்.




# சுவாமி விபுலாநந்த அடிகளாரின் கருங்கல் சிலை மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில் இன்று திறப்பு

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 133 ஆவது வயதில் அவரது முதலாவது கருங்கல்சிலை இன்று மட்டுமாநகரின் கல்லடிப் பாலத்தில் திறந்து வைக்கப்படுகின்றது.

இதற்காக தங்களை அர்ப்பணித்து உழைத்த மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த நூற்றாண்டு விழாச் சபையினர், அதன் தலைவர் முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் கணபதிப்பிள்ளை பாஸ்கரன் உள்ளிட்ட குழுவினர் பாராட்டுக்குரியவர்கள்.



விபுலமாமணி வித்தகர் வி.ரி.சகாதேவராஜா

இவ் வேளையில் அதற்காக முழுமூச்சுடன் இயங்கி இந்தியாவிற்குப் பல தடவைகள் சென்று தனது நிதி, நேரம் சிரமம் அனைத்தையும் பொருட்படுத்தாமல் சுவாமிகளின் கருங்கல் சிலையை அமைத்து மட்டக்களப்பிற்கு கொண்டு வந்த சிலையமைப்புக்குழுத் தலைவரும் பிரபல தொழிலதிபருமான தேசபந்து முத்துக்குமார் செல்வராஜாவை காரைதீவு மண் நன்றியோடு பார்க்கிறது. பாராட்டுகிறது.

இதற்கு உதவிய 33 பரோபகாரிகளும் பாராட்டுக்குரியவர்கள்.



உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் 1892.03.27ஆம் திகதி இவ் அவனியில் அவதரித்து 1947.07.19ஆம் திகதி மகா சமாதி அடைந்தார்.

அவர் மகாசமாதியடைந்த பின்னர், 1969 ஆம் ஆண்டில் தான் அவர் பிறந்த காரைதீவு மண்ணில் அடிகளாருக்கு முதலாவது சிலை விபுலானந்த நூலகத்தின் முன்னால் நிறுவப்பட்டது. அதாவது அவர் மகா சமாதி அடைந்து 22 வருடங்களின் பின்னர் 1969.10.08 ஆம் திகதி நிறுவப்பட்டது. அச் சிலை எனது மைத்துனர் முன்னாள் காரைதீவு கிராமாட்சிமன்ற அக்கிராசனர் டாக்டர் மா. பரசுராமன் தலைமையில் இந்தியா வின் தவத்திரு குன்றக்குடி அடிகளாரால் திறந்து வைக்கப்பட்டது.

ஆனால், மட்டக்களப்பு மக்கள் அதனை ஒருபடி விஞ்சி விட்டார்கள் .

அதாவது உலகின் முதல் தமிழ் பேராசிரியருக்கு உலகில் முதலாவது சிலை அவர் சமாதி அடைந்து 16 வருடங்களின் பின் அதாவது 1963.01.14ஆம் திகதி மட்டக்களப்பு தமிழ்க் கலா மன்றத்தினர் மட்டக்களப்பு நீதிமன்ற முன்றிலில் சிலை நிறுவி சேவைகளுக்கு நன்றி கூறி கௌரவித்தனர். இது ஒரு வரலாறு.

அச்சமயம் சுவாமியின் பிறந்தபதியாம் காரேறு மூதூர் பெருங்குடி மக்கள் மனமுவந்து ஆசிச் செய்தியை புது முறையில் அனுப்ப முன் வந்தது. அந்த ஆசிச் செய்தியை வெள்ளிப் பேழையில் இட்டு அஞ்சலோட்ட வீரர் ஒருவர் காரைதீவிலிருந்து 27 மைல் தொலைவில் உள்ள மட்டக்களப்பிற்கு ஓட்டத்தில் எடுத்துச் சென்று சமர்ப்பித்ததும் ஒரு வரலாறு.

அவ்வமயம் அதனை பார்த்திருந்த எனது மைத்துனர் சைவப் புலவர் பண்டிதர் வீ.ரி. செல்லத்துரை அவர்கள் இவ்வாறு கவி வடிக்கிறார் .

தொடர்ச்சி ▼

# சுவாமி விபுலாநந்த அடிகளாரின் கருங்கல் சிலை மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில் இன்று திறப்பு



Swami Vipulananda
சுவாமி விபுலானந்தர்
(1892 - 1947)
ஸ்தாபகர்: ராமகிருஷ்ண மிஷன், இலங்கை
Founder:Ramakrishna Mission, Sri Lanka

**தொடர்ச்சி▲**

“பொற்கோட்டிமயமிசை பொலிந்திலங்கு பரிதியென புலமையாண்டு
சொற்கூட்டும் சுருதியிலே யாழ் மணக்கச் சுவை மடுத்த தூயோன் செம்மல் – நட்பூட்டும்
நற்பணிக்கு நவில் நன்றிச்சிலை வடித்து நடுகல் நாட்ட
முற்கூட்டி வந்த கலா மன்றத்தார் தமிழார்வம் முழங்க மாதோ”

சைவமும் தமிழும் வளர்த்த வித்தகனுக்கு நன்றி கூறும் சிலை நிறுவிய அம் மகத்தான பணியை செய்த மட்டக்களப்பு தமிழ்க் கலா மன்றத்தினருக்கு, காரைதீவு மண்ணில் இருந்து அவர் வடித்த நன்றியுடன் கூடிய வாழ்த்துப்பா அது.

1999 ஆம் ஆண்டு காரைதீவு சுவாமி விபுலானந்த மணிமண்டபத்தின் முன் புதிய சிலை நிறுவிய சமயம் என்னால் வெளியிடப்பட்ட “அடிகளார் நினைவாலய மலரில்“ மட்டக்களப்பில் 1963 இல் நிறுவிய சிலை தொடர்பான பதிவுகள் இடப்பட்டன. அதன் நிழல்பிரதி இங்கு இணைக்கப்பட்டிருக்கிறது.

சுவாமிகள் இவ் வையகத்தில் அவதரித்து 133 வருடங்களாகின்றன. அவர் மகாசமாதியடைந்து 77வருடங்களாகின்றன. ஆக வாழ்ந்த காலம் 55வருடங்கள்.

அவர் பிறந்து 133 வயதாகின்ற இவ் வேளையில் அதே மட்டக்களப்பு மக்கள் அதே அடிகளாருக்கு உலகில் முதல் கருங்கல் சிலையை நிறுவுவது மற்றுமொரு வரலாறாகும்.

அதற்காக உழைத்த அத்தனை உள்ளங்களும் சாகா வரம் பெற்றவர்களாவர்.

அதற்கான வரலாற்று வாழ்த்தை சுவாமியின் மிகுந்த பற்றாளனான அடியேன், மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த நூற்றாண்டு விழா சபையினருக்கு காரைதீவு மண் சார்பாக வரலாற்று வாழ்த்துக்களை தெரிவிப்பதில் இறும்பூதடைகின்றேன்.

இப்பாரியபணியை தமிழ் கூறும் நல் உலகம் உயிர்உள்ளவரை யாரும் மறக்க முடியாது.

சுவாமிகள் பட்டதாரியாக, பாடசாலைகளின் முகாமையாளராக, பல்கலைக்கழகங்களில் தமிழ்த் துறைப் பேராசிரியராக, அறிஞராக, எழுத்தாளராக, திறனாய்வாளராக, பேச்சாளராக, ஒப்பியலாளராக, பத்திராதிபராக, புத்தகாசிரியனாக, ஆராய்ச்சியாளராக, மொழிபெயர்ப்பாளராக, முத்தமிழ் வித்தகராக பல வகிபாகங்களுடன் விளங்கியவர்.

அவர் போல் ஒரு தமிழறிஞர் பிறக்கவில்லை எனலாம். அவர் அகிலத்திற்கு கிடைத்த ஒரு பொக்கிஷம். அவர்




சமூகத் துறவியாக வாழ்ந்து செய்த தொண்டுகளும் சைவத்திற்கும் தமிழுக்குமாற்றிய சேவைகளும் அவரை என்றும் நினைவுகூரச் செய்வனவாகும்.

ஈழம் முதல் பனி இமயம்வரை கொடி கட்டிய இசைத் தமிழனான அடிகளாரின் முதலாவது கருங்கல் சிலை நிறுவிய ஞான்று உலகின் எட்டுத்திக்கிலும் அவர் புகழ்பரப்பி மேலும் கொண்டாடப்படவேண்டும் என்பதே எமது வேணவா.



# இன்றைய ராசி பலன்கள் - 17.05.2025




இன்றைய நாள் மிகவும் பரபரப்பாக இருக்கும். ஆனால் நீங்கள் ரிலாக்ஸ்டாக இருங்கள்.

இன்று நீங்கள் ஓய்வெடுக்க இயலாத அளவிற்கு வேலை இருக்கும். அதன் காரணமாக நீங்கள் சில அசௌகரியங்களை உணர்வீர்கள்.

குடும்பத்தில் சில குழப்பங்கள் காணப்படும். நீங்கள் அனுசரித்துப் போக வேண்டியது அவசியம்.

அதிகரிக்கும் செலவினங்களினால் கவலைகள் உண்டாகும். தேவையற்ற செலவுகளை கட்டுப்படுத்தவும்.

ஆரோக்கியம் சற்று கவலை அளிப்பதாக இருக்கும். நீங்கள் களைப்புடன் காணப்படுவீர்கள்.




இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். உங்கள் செயல்களில் சிறிது கவனமாக இருக்க வேண்டும். உற்சாகமாக இருப்பீர்கள் என்றாலும் திட்டமிடல் அவசியம்.

இன்றைய வேலைகள் மிகவும் கடினமாக இருக்கும். நீங்கள் பொறுமை இழக்க நேரிடலாம். உங்கள் திறமை கேள்விக்குறியாக அமையலாம்.

உங்களின் சுயநலப் போக்கு காரணமாக தம்பதிகளுக்கிடையேயான உறவு பாதிக்கும். எதிலும் யதார்த்தமாக இருப்பது நல்லது.

இன்று நிதிநிலைமை சீராக இல்லை. கூடுதல் செலவினங்கள் நேரலாம்.

இன்று கால் வலி மற்றும் தலைவலி போன்ற உபாதைகளால் நீங்கள் பாதிக்கப்படலாம். குளுமையான உணவுகளைத் தவிர்க்கவும்.




சிறந்த திட்டமிடலின்மை காரணமாக அவநம்பிக்கை உணர்வு எழும். இதனால் உங்கள் தன்னம்பிக்கை குறையும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் உங்கள் சக பணியாளர்களுடன் பிரச்சினைகள் ஏற்படலாம். பொறுமையுடன் இருந்து கடமையைச் செய்யுங்கள்.

உங்கள் எண்ணங்களை சரியாக பரிமாறிக் கொள்ளாததன் காரணமாக கணவன் மனைவி உறவில் கருத்து வேறுபாடு ஏற்படலாம்.

இன்று பணப் பற்றாக்குறை காணப்படுகின்றது. உங்கள் செலவுகளை சமாளிக்க கடன் வாங்க நேரிடலாம்.

மன அழுத்தத்தின் காரணமாக உங்கள் உடல் பகுதிகளில் உபாதைகள் ஏற்படலாம்.




இன்று முற்போக்கான வளர்ச்சி ஏற்படும் நாள். முக்கியமான முடிவுகளை நீங்கள் எடுக்கலாம். அது உங்களுக்கு நல்ல பலன்களைத் தரும்.

பணியில் இன்று உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். கடினமான பணிகளிலும் உங்கள் திறமை பளிச்சிடும்.

இன்று உங்கள் வாழ்க்கைத்துணையார் மகிழ்ச்சியுடன் காணப்படுவார். இன்று உங்கள்நண்பருடைய வீட்டு விசேஷத்தில் கலந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சீராக உள்ளது. எதிர்காலத்திற்கு பயன் தரும் வகையில் இன்று சேமிப்பீர்கள்.

இன்று நீங்கள் உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் காணப்படுவீர்கள் என்பதனால் ஆரோக்கியம் மிகச் சிறந்த முறையில் இருக்கும்.




கோவில் திருவிழாக்கள் அல்லது ஆன்மிகக் காரியங்கள் இன்று உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

இன்று உங்கள் பணியில் பிரகாசிப்பீர்கள். இன்று ஓய்வில்லாமல் பணியாற்றுவீர்கள். சிறந்த முறையில் திட்டமிட்டு பணிகளைச் செவ்வனே முடிப்பீர்கள்.

இன்று நகைச்சுவை உணர்வுடன் காணப்படுவீர்கள். உங்கள் துணையின் உணர்வுகளை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

இன்று நிதி ஆதாயமான நாள். உங்கள் தேவைக்காக கடன் வாங்குவது பயனளிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறந்து விளங்கும்.




வாழ்க்கையின் சாரம் பற்றி இன்று நீங்கள் கற்பீர்கள். இறைவழிபாடு மற்றும் ஆன்மிக காரியங்களில் ஈடுபடுவதன் மூலம் உங்கள் கவலைகளை மறக்கலாம்.

இன்று வேலைகள் அதிகமாக காணப்படும். அதை சரியான முறையில் முடிக்க உங்கள் பணிகளை சரியாக அட்டவணையிட்டு செயலாற்றுங்கள்.

உங்களின் சுயநலப் போக்கு காரணமாக தம்பதிகளுக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படலாம்.

இன்று செலவுகள் காணப்படுகின்றது. செலவுகளை சமாளிக்க சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

இன்று கண்களில் எரிச்சல் காணப்படலாம். கண் பரிசோதனை செய்துகொள்ள வேண்டியது அவசியம். அமைதி மற்றும் பொறுமையை கடைபிடியுங்கள்.




இன்று உற்சாகம் குறைந்து காணப்படும். அதன் காரணமாக உங்கள் வளர்ச்சி பாதிக்கப்படும்.

இன்று பணிச்சுமை காரணமாக பணியின் பொழுது பொறுமையின்றி காணப்படுவீர்கள். அதனால் அதிருப்தியுடன் காணப்படுவீர்கள்.

இன்று உங்களிடம் கசப்பான உணர்வுகள் காணப்படலாம். உங்கள் நடத்தையில் அது வெளிப்படும். வாழ்க்கைத் துணையாருடன் நட்பான முறையில் அனுக முயலங்கள்.

இன்று செலவுகளை கட்டுப்படுத்துவது கடினம். உங்கள் கைமீறிப் போகின்ற செலவுகள் காரணமாக சிறிது பணமே கையில் தங்கும்.

இன்று தலைவலி மற்றும் சளி போன்ற உபாதைகளால் கவலை ஏற்படும்.




இன்று சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள். உங்களது சிறந்த அனுகுமுறைமூலம் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். இன்று வெளிப்படையாகப் பேசுவீர்கள்.

கடினமான பணிகளையும் இன்று எளிதில் முடிப்பீர்கள். திருப்தியும் அடைவீர்கள். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும்.

நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். ஒருவருக்கொருவர் சரியாக உருவாகியது போல் உணர்வீர்கள்.

இன்று பணப்புழக்கம் அதிகமாகக் காணப்படும். அதிக நேர உழைப்புக்கான ஊக்கத்தொகை உங்களது பணவரவை அதிகரிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.05.2025




இன்று ஆன்மீக காரியங்களில் ஈடுபடுவதன் மூலம் வெற்றிகரமான பலன்களைக் காண்பீர்கள். அதன் மூலம் இன்றைய நாளை சிறப்பான தாக ஆக்குவீர்கள். உங்கள் வாழ்க்கை தரத்ததை உயர்த்துவீர்கள்.

குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பே வேலைகளை முடித்து உங்கள் திறமையை நிரூபிப்பீர்கள். மேலதிகாரியின் பாராட்டுகள் கிடைக்கப்பெறுவீர்கள்.

உங்கள் வாழ்க்கைத் துணையுடன் உண்மையான அனுகுமுறையைக் கையாள்வீர்கள். அவரும் உங்களை நல்ல முறையில் புரிந்து கொள்வார்.

நிதிநிலைமை இன்று சீராக உள்ளது. இன்று பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் உற்சாகம் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று நீங்கள் எதிர்பார்த்த பலன் களைப் பெறுவீர்கள். உள்ளதைக் கொண்டு வளமோடு இருப்பீர்கள். உங்கள் இனிமையான பேச்சால் பிறரை திருப்தியடையச் செய்வீர்கள்.

திறமையுடன் செயலாற்றுவது இன்று சற்று கடினமாக இருக்கும். பணியில் அதிக கவனத்தை செலுத்த வேண்டும்.

நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையிடம் உணர்ச்சிப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள்.

செலவுகள் அதிகமாக காணப்படுவதன் காரணமாக பணத்தை நிர்வகிப்பது கடினமாக இருக்கும்.

தாயின் உடல் நிலை குறித்து செலவுகள் செய்ய நேரிடலாம்.




இன்று நீங்கள் சில ஏமாற்றங்களை சந்திக்க வாய்ப்பு உள்ளது. எனவே உங்கள் செயல்களை திட்டமிட்டு அதன் படி செயலாற்றுங்கள்.

இன்று தன்னம்பிக்கை இழந்து காணப்படுவீர்கள். பணிகளை மெது வாகச் செய்வீர்கள். வேலை செய்யும் முறையை முன் கூட்டியே திட்டமிடுவது நல்லது.

நீங்கள் களைப்பாக காணப்படுவீர்கள். அது உங்கள் நடத்தையில் வெளிப்படும் அது நல்லுறவை பாதிக்கும்

இன்று அதிக செலவுகள் காணப்படும். அதற்காக நீங்கள் கடன் வாங்க நேரிடலாம்.

காய்ச்சல் அல்லது சளி போன்ற உபாதைகளால் பாதிக்கப்படலாம். குளுமையான பதார்த்தங்களை தவிரத்து விடுங்கள்.




இன்று உங்கள் திறமைகளை நன்கு புரிந்து கொள்வீர்கள் உங்கள் விருப்பத் துக்கு ஏற்றவாறு உங்கள் லட்சியங்களை அமைத்துக் கொள்வீர்கள்.

சிறந்த முறையில் பணியாற்றி மேலதி காரியின் பாராட்டைப் பெறுவீர்கள். கடினமான பணிகளையும் இன்று எளிதாகச் செய்து முடிப்பீர்கள்.

நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையிடம் நல்ல உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். அதனால் மகிழ்ச்சி உண்டாகும்.

நிதிநிலைமை சீராக இருக்கும். இன்று உங்களால் கணிசமாக சேமிக்க இயலும்.

உங்களின் தன்னம்பிக்கை இன்று உங்களை ஆரோக் கியமாக வைத்திருக்கும்.

# தும்பளை இளந்தென்றல் விளையாட்டுவிழா இன்று

(வடமராட்சி நிருபர்)

பருத்தித்துறை தும்பளை தெற்கு இளந்தென்றல் விளையாட்டுக்கழகத் தின் விளையாட்டுவிழா இன்று (17) சனிக்கிழமை கழகத்தின் தலைவர் ப. சுவேந்திரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தின ராக பருத்தித்துறை பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரி பியந்த அமர சிங்க கலந்து கொள்ளவுள்ளார்.



சிறப்பு விருந்தினர்களாகக் கர வெட்டி பிரதேச செயலக தலைமையக சமுர்த்தி முகாமையாளர் இ. அன்ரனி, பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தி யாலய ஆசிரியர் ஆசிரியர் ந. கேதீஸ்வரா, ஓய்வு நிலை அதிபர் செ. செல்வச் சந்திரன் ஆகியோர் கலந்து கொள் வர்.

# சனசமூக நிலையத்தின் அரங்கு திறப்பு விழா

பருத்தித்துறை தும்பளை தெற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத் தின் அரங்கு திறப்பு விழா நாளைய தினம் (18) ஞாயிற்றுக்கிழமை பிற் பகல் 3 மணிக்கு நிலையத் தலைவர் செ.செல்வச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தின ராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் ஜெ. றஜீவன் கலந்து கொள்ள வுள்ளார்.

சிறப்பு விருந்தினராக தும்பளை கிராம அலுவலர் சி. கௌதமனும் கௌரவ விருந்தினராக பருத்தித் துறை பிரதேசசபை உறுப்பினர் சி. அருள் ரூபனும் கலந்து கொள்வர்.

அரங்கு திறந்து வைப்பதுடன் கலை நிகழ்வுகள், பரிசளிப்பு என்பனவும் இடம் பெறும்.